**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**

# IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

Calendar :

Miscellaneous :

Preliminary register :

Sessions :

Sessions Case No. 163 of 2019

Deposition of witness for :
Prosecution : PW- 3
Defence :
Court :

Name : Alamelu

Husband's Name : Kamalesan

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of June 2022.**

முதல் விசாரணை:

நான் தற்போது செங்கம் தாலுகா மேல்பள்ளிப்பட்டு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 என் மகள். அ.சா.2 என் மகன். என் கணவர் கமலேசன் இறந்து சுமார் 15 ஆண்டுகளிருக்கும். என் மகன் பெருமாள்அ.சா.2 தீயணைப்பு துறையில் ஓட்டுநராக பணி செய்து வருகிறார். என் மகள் தீபா பொம்மிடி கடத்தூரில் குடியிருந்து வருகிறார். எண் கணவரின் சொந்த ஊர் பெரியதள்ளப்பாடி கிரமமாகும். அந்த ஊரில் என் கணவர் மற்றும் அவரது சகோதரருக்கு பாத்தியப்பட்ட வீடு ஒன்று பொதுவில் உள்ளது. அந்த வீட்டில் யாரும் குடியிருக்கவில்லை காலியாக உள்ளது. எதிரி பிரசாந் எனது அக்கா பேரன், எதிரி பாரதிராஜாவும் எனக்கு பேரன் முறைதான் வேண்டும் (எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில்லை கு.வி.மு.சா.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது). சுமார் 3 ஆண்டுகளுக்கு பெரியதள்ளப்பாடி கிராமத்திற்கு நாங்கள் அனைவரும் குடும்பத்துடன் என் நாத்தனார் பேரனின் திருமணத்திற்கு சென்றிருந்தோம். நான் என் மகள் தீபா, ஆகியோர் கூட்டிற்கு வெளியில் திண்ணையில் உட்கார்ந்திருந்தோம். என் மகன் பெருமாள் சுமார் 9, 10 மணிக்கு மேல் சாப்பாடு வேண்டும் என்று சொல்லி வீட்டிறக்கு வந்தான். என் மகன் எங்களிடம் பேசிக்கொண்டிருந்தபோது இரண்டு நபர்கள் யார் என்று தெரியவில்லை அவர்களை பார்த்தவுடன் என் மகன் ஓடினான். என் மகனை துரத்திக்கொண்டு அவர்களும் ஓடினார்கள். என்ன காரணத்திற்காக என் மகனை துரத்தினார்கள் என்று தெரியவில்லை. நாங்கள் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து சுமார் 50 அடி தூரத்திற்கு என் மகன் கால் இடறி கீழே விழுந்தார். விழுந்த பிறகு என் மகன் அடிப்படிருப்தாக சிலபர் தூக்கிக்கொண்டு வந்தார்கள். என் மகனுக்கு வயிறு தோள்பட்டை மற்றும் உடம்பு முழுவதும் காயங்களாக இருந்தது. என் மகனின் உடம்பில் எவ்வாறு காயங்கள் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. என் மகனை ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்து கான்பித்தபோது மருத்துவர்கள் முடியாது என்று சொல்லிவிட்டதால் சேலம் மணிப்பால் மருத்துவமணைக்கு சிகிச்சைக்கு அழைத்துச்சொன்றோம். என் மகன் மேற்படி மருத்துவமணையில் சுமார் 10, 20 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள். என் மகன் அணிந்திருந்த துணி மணிகளை போலீசார் வாங்கினார்களா என்று எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பறுதல் மகஜரிலுள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான் என் மகன் அடிப்பட்டுவிட்டதால் அந்த கையொப்பத்தை நான் செய்தேன் அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அந்த கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.3

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது:

ஒம்/-

**திரு.எம்.அஷ்பாக் அஹமத், பி.ஏ.,பி.எல்.,**
**உதவி அமர்வு நீதிபதி,**
**ஊத்தங்கரை.**